இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 14.05.2026

# மோடியின் ஏழு சாபங்கள்!

பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் நாட்டு மக்களுக்கு ஏழு சாபங்களை விடுத்துள்ளார்.

1. **முடிந்தவரையில் வீட்டில் இருந்தே வேலை பாருங்கள்.**
2. **திருமணத்துக்கு தங்கம் வாங்க வேண்டாம்.**
3. **பெட்ரோல், டீசல் பயன்பாட்டைக் குறைத்துக் கொள்ள வேண்டும். பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்த வேண்டும். மின் வாகனங்களைப் பயன்படுத்த வேண்டும்.**
4. **சமையல் எண்ணெய் பயன்பாட்டைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.**
5. **யூரியா போன்றவற்றைத் தவிருங்கள். இயற்கை விவசாயத்துக்குத் திரும்புங்கள்.**
6. **வெளிநாட்டுப் பொருட்களை தவிருங்கள். உள்நாட்டு உற்பத்தியை அதிகரியுங்கள்.**
7. **ஓராண்டுக்கு வெளிநாடுகளுக்குச் சுற்றுலா செல்ல வேண்டாம்.**

இதுதான் பிரதமரின் சாபங்கள். அதாவது, 'நாடு பல பிரச்சினைகளில் மாட்டப் போகிறது. என்னால் எதுவும் செய்ய முடியாது. எல்லாவற்றையும் நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள்' என்கிறார் பிரதமர்.

அப்படியானால் இந்தியா அனைத்திலும் வளர்ந்து விட்டது என்று பீற்றிக் கொண்டது எல்லாம் சும்மாவா? இந்தியா தற்போது உலகின் ஐந்தாவது பொருளாதாரமாக உள்ளது என்று சொன்னாரே? உலகின் ஐந்தாவது பொருளாதார நாட்டால் இப்போதைய பிரச்சினையை தற்காலிகமாகக் கூட தீர்க்க முடியாதா?

உலகளவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் நிறுவப்பட்ட திறனில் இந்தியா ஐந்தாவது இடத்தில் உள்ளதாகச் சொல்லப்பட்டது. அதனை வைத்துச் சரி செய்ய முடியவில்லையா?

**"25 ஆண்டுகளில் உலகம் பல ஏற்றத்தாழ்வுகளைக் கண்டுள்ளது. ஆனால் இந்தியா ஒரு தனிப்பட்ட நிலைப்பாட்டில் காணப்படுகிறது. உலகம் மந்த நிலையைப் பற்றிப் பேசும் போது இந்தியா வளர்ச்சியின் கதையை எழுதுகிறது" என்று கடந்த ஆண்டு சொன்னாரே பிரதமர்! வளர்ச்சியின் கதையை எழுதும் பிரதமர், எதற்காக இப்போது சோக கீதம் பாடுகிறார்?**

**75 ஆண்டுகள் இல்லாத அளவுக்கு இந்தியாவை வளர்த்துவிட்டதாகச் சொன்னவர், இப்போது மக்கள் தலையில் அனைத்துச் சுமைகளையும் தூக்கி வைப்பது ஏன்?**

ஈரான் – அமெரிக்கா போர் மீண்டும் வெடிக்கலாம் என்ற பீதியை மீண்டும் கிளப்புகிறார்கள். போர் ஓய்ந்திருந்தாலும் ஹோர்முஸ் நீரிணையில் ஈரான் விதித்துள்ள தடை அப்படியேதான் இருக்கிறது. இதனால் எண்ணெய், எரிவாயு உள்ளிட்ட பொருட்கள் மட்டுமின்றி யூரியா முதலான விவசாய இடுபொருட்கள் இந்தியாவுக்குக் கிடைப்பதிலும் மிகப்பெரிய நெருக்கடி எழுந்துள்ளது. இதனைச் சமாளிக்க இதுவரை பிரதமர் என்ன செய்தார்?

**நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு சரிவு, பொருளாதாரப் பாதிப்பைக் குறைக்க இதனைச் செய்ய வேண்டும் என்றும் கட்டளையிட்டுள்ளார் பிரதமர். தங்கம் அதிக அளவில் வாங்குவது இந்தியப் பொருளாதாரத்தைப் பாதிக்கும் என்றும், ரூபாய் மதிப்பை சரிவடையச் செய்யும் என்றும் அவர் கருதுகிறார். தங்கம் இறக்குமதிக்காகச் செலவிடப்படும் அந்நியச் செலாவணியைக் குறைத்து, போரினால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்க இந்த நடவடிக்கை உதவும் என்று அவர் நினைக்கிறார். தங்கம் வாங்குவதை ஓராண்டு காலத்துக்கு மொத்தமாக நிறுத்தினால் 72 பில்லியன் டாலர்கள் ( 6.85 லட்சம் கோடி) சேமிக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது.**

"பிரதமர் மோடி இந்திய மக்களுக்கு விடுத்திருக்கும் வேண்டுகோள், இந்தியாவில் பொருளாதார அவசரநிலை பிறப்பிக்கப்படுமா? என்ற ஐயத்தை ஏற்படுத்துகிறது" என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சி எம்.பி. ரவிக்குமார் சொல்லி இருக்கிறார். அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 360, நாட்டில் பொருளாதார அவசர நிலையைப் ( financial emergency) பிறப்பிக்கும் அதிகாரத்தை ஒன்றிய அரசுக்கு வழங்குகிறது. அதனைச் சுட்டிக் காட்டி தனது ஐயத்தைக் கிளப்பி இருக்கிறார்.

**"இந்தியாவின் அல்லது அதன் ஆட்சிப்பகுதியின் ஏதேனும் ஒரு பகுதியின் நிதி நிலைத்தன்மைக்கோ அல்லது கடன் நிலைக்கோ அச்சுறுத்தல் ஏற்படும் வகையிலான ஒரு சூழல் உருவாகியுள்ளது என்று குடியரசுத் தலைவர் திருப்தியடைந்தால், அவர் ஒரு பிரகடனத்தின் மூலம் அத்தகைய அறிவிப்பை வெளியிடலாம்." என அந்த உறுப்பு கூறுகிறது. இதன் படி மாநிலங்களின் செயல்பாட்டையே கட்டுப்படுத்தி விடுவார்கள். ஒன்றிய மாநில அரசுகளின் ஊழியர்களது ஊதியத்தைக் குறைக்கவும் அது அதிகாரமளிக்கிறது. பொருளாதார அவசரநிலை பிறப்பிக்கப்பட்டால் மாநில அரசுகள் பட்ஜெட்டுகளை நிறைவேற்ற முடியாது. அதைக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்ப வேண்டும்" என்று அவர் சுட்டிக்காட்டி இருக்கிறார்.**

வெளிநாட்டு நெருக்கடி என்று சொல்லி இந்தியாவில் பொருளாதார நெருக்கடி நிலையைப் பிறப்பித்து மாநிலங்களின் நிதி அதிகாரத்தைப் பறித்துத் தன் கையில் வைத்துக்கொள்ள நினைக்கிறார் பிரதமர் மோடி.

**இந்தியாவின் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை (CAD) 84.5 பில்லியன் டாலராக ( GDP யில் 2 விழுக்காடு ) அதிகரிக்கும் என்று ஐ.எம்.எஃப். கணித்துள்ளது. அதாவது இந்திய மதிப்பில் 8 லட்சத்து 4 ஆயிரத்து 77 கோடி நடப்புக் கணக்கு பற்றாக்குறை உள்ளது. இதனைத் தவிர்க்க ஒன்றிய பா.ஜ.க. அரசு என்ன செய்தது?**

**யாரும் வெளிநாடு போக வேண்டாம் என்று சொன்ன பிரதமர் அவர்கள், வரும் 15 ஆம் தேதி முதல் 20 ஆம் தேதி வரை 5 நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொள்ளப் போகிறார். ஐக்கிய அரபு அமீரகம், நெதர்லாந்து, சுவீடன், நார்வே, இத்தாலி ஆகிய நாடுகளுக்குச் செல்ல இருக்கிறார்.**

**"நாம் அனைவரும் இணைந்துப் போராட வேண்டும். தேசபக்தி என்பது நாட்டுக்காக உயிரிழப்பது அல்ல. நாட்டுக்காக வாழ்ந்து அதற்காக ஒருவர் தன் கடமையை நிறைவேற்றுவதும் தேசபக்தி தான்" என்று பிரதமர் சொல்லி இருக்கிறார். ஒவ்வொரு மக்களும் பல்வேறு இழப்புகளை தாரை வார்த்துத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு மேல் நாட்டு மக்களிடம் என்ன எதிர்பார்க்கிறார் பிரதமர்?**

---

## தேர்வுக்கு முன்பே வினாத்தாள் கசிந்தது!

# 3 ஆம் தேதி நடைபெற்ற 'நீட்' தேர்வு ரத்து!

## தேசிய தேர்வு முகமை அறிவிப்பு!

புதுடெல்லி, மே 14-

முறைகேடு புகார் காரணமாக கடந்த 3ஆம் தேதி நடைபெற்ற நீட் தேர்வு ரத்து செய்யப்படுவதாகவும், மறுத்தேர்வு நடத்தப்படும் என்றும் தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது. இதனால், 20 லட்சம் மாணவர்கள் பாதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது.

மருத்துவப் படிப்புக்கான நுழைத்தேர்வான நீட் தேர்வு கடந்த 3 ஆம் தேதி நாடு முழுவதும் நடைபெற்றது. 551 நகரங்களில் நடைபெற்ற தேர்வில் 22 லட்சத்து 5 ஆயிரம் மாணவர்கள் தேர்வு எழுதினர். ராஜஸ்தான், உத்தரகாண்ட், மகாராஷ்டிரா மாநிலங்களில் மொத்த மதிப்பெண் 720, அதில் 600 மதிப்பெண்ணுக்கான கேள்விகள் மாணவர்களுக்கு 5 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது தெரியவந்தது. இதனைத்தொடர்ந்து ராஜஸ்தான் புலனாய்வு காவல்துறை வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது. இது தொடர்பாக 15 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், மறுத்தேர்வு நடத்த வேண்டும் என்ற கோரிக்கை பல்வேறு தரப்பிலும் எழுந்தது.

இந்நிலையில், முறைகேடு புகார் காரணமாக கடந்த 3ஆம் தேதி நடைபெற்ற நீட் தேர்வு ரத்து செய்யப்படுவதாகவும், மறுத்தேர்வு நடத்தப்படும் என்றும் தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

மறுதேர்வுக்கான தேதி விரைவில் அறிவிக்கப்படும் என்றும் மத்திய புலனாய்வு பிரிவு முறைகேடு தொடர்பாக விசாரணை நடத்தி வருவதாகவும், அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும் தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

நீட் தேர்வே சுமை என கூறி வரும் நிலையில், முறைகேடு மறுத்தேர்வு என்பது மாணவர்களுக்கு பெரும் சுமையாக மாறியுள்ளது. இதனால், 20 லட்சம் மாணவர்கள் மீண்டும் தேர்வு எழுத வேண்டிய சூழல் உருவாகியுள்ளதால் அவர்களுக்கு மனநல ஆலோசனை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.

---

### நீட் முறைகேடு :

# தேசிய அளவில் மாணவர்கள் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்!

## அரவிந்த் கெஜ்ரிவால் வலியுறுத்தல்!

டெல்லி, மே 14-

நீட் வினாத்தாள் தேர்வுக்கு முன்பே லீக்காகி விட்டதாக எழுந்த குற்றச்சாட்டு காரணமாக, மே 3ஆம் தேதி நடைபெற்ற நீட் தேர்வு றது செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டு உள்ளது. இந்த நிலையில் நீட் தேர்வில் நடைபெற்ற முறைகேட்டை கண்டித்து தேசிய அளவில் மாணவர்கள் ஒன்று திரண்டு போராட வேண்டும் என ஆம்ஆத்மி கட்சி தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் கூறி இருக்கிறார்.



நீட் தேர்வு முறைகேடு தொடர்பான தனது அறிக்கையில், "ஒவ்வொருஆண்டும், 7 கோடி இளைஞர்கள் பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் சேருவதற்கும், அரசுப் பணிகளைப் பெறுவதற்கும் நுழைவுத் தேர்வுகளை எழுதுகின்றனர். ஆனால், அரசியல் ஆதரவுடன் செயல்படும் வினாத்தாள்களை கசிய விடும் கும்பல்கள், இந்த இளைஞர்களின் நம்பிக்கையையும் மன உறுதியையும் சிதைத்து வருகின்றன" என்று குற்றம்சாட்டி இருக்கிறார்.

தேர்வுக்கு முன்பே வினாத்தாள்களை கசிய விடுவதில் ஈடுபட்டுள்ள மாஃபியா கும்பல்களும், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் தலைவர்களும் நாட்டின் முக்கிய எதிரிகளாவர். இவர்கள் தேசத்தின் அடித்தளத்தையே அரித்துச் சிதைத்து வருகின்றனர். அரசுகளும் இந்த குற்றத்தில் கூட்டாளிகளாக மாறியுள்ளன. எனவே இதற்கு எதிராக இளைஞர்கள் நாடு தழுவிய அளவிலான, தீர்க்கமான தொரு போராட்டத்தைத் தொடங்க வேண்டும் என்று கேட்டு கொண்டுள்ளார்.

---

## தமிழ்நாட்டில் ஆளுநர் ஆட்சி என்ற பெயரில்

# பா.ஜ.க. ஆட்சி அமைக்க சதித் திட்டம் - முறியடிப்பு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு பழ.நெடுமாறன் பாராட்டு!

சென்னை, மே 14-

தமிழகத்தில் ஆளுநர் ஆட்சி என்ற பெயரில் பா.ஜ.க. ஆட்சி அமைக்க வகுக்கப்பட்ட சதித் திட்டம் முறியடிக்கப்பட்டுள்ளது என்று, தமிழர் தேசிய முன்னணியின் நிறுவனர் பழ.நெடுமாறன், தலைவர் செ.ப.முத்தமிழ்மணி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.



இது தொடர்பாக, அவர்கள் கூட்டாக நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை வருமாறு: -

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலை உருவாகி, அதிக இடங்களில் வெற்றி பெற்ற த.வெ.க. தலைவர் விஜய் முதல்வர் பொறுப்பை ஏற்றுள்ளார்.

அவருக்கும், அவரது கட்சியைச் சார்ந்த அமைச்சர்கள் மற்றும் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும் வாழ்த்தினையும், பாராட்டுதலையும் தெரிவித்து கொள்கிறோம்.

முதல்வர் விஜய் ஆட்சி அமைப்பதற்கு உதவும் வகையில், தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகித்த சில கட்சிகள் அவருக்கு ஆதரவு தருவதற்கு ஒப்புதல் கொடுத்த, தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை பாராட்டுகிறோம்.

இவ்வாறு செய்ததின் மூலம் தமிழகத்தில் யாருக்கும் பெரும்பான்மை இல்லை என்று கூறி, ஆளுநர் ஆட்சி என்ற பெயரில் பா.ஜ.க. ஆட்சி அமைக்க வகுக்கப்பட்ட சதித் திட்டத்தை ஸ்டாலின் முறியடித்திருக்கிறார்.

**பெருந்தன்மையை அனைவரும் பாராட்டுவர்!**

தமிழகத்தில் ஜனநாயகம் தழைப்பதற்கு உதவிய அவருடைய பெருந்தன்மையை அனைவரும் பாராட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை.

கடந்த தி.மு.க. ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட நல்ல திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துமாறும், தனது தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறும் புதிய முதல்வர் விஜய்யை கேட்டு கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

---

## பல வெற்றி, தோல்விகளைச் சந்தித்த இயக்கம் தி.மு.க.!

# தி.மு.க. ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாகச் செயல்படும்!

## "தி.மு.க., அ.தி.மு.க. கூட்டணி என்பது வதந்தி" - ஆர்.எஸ்.பாரதி!



சென்னை, மே 14-

77 ஆண்டு கால வரலாற்றில் பல வெற்றி தோல்விகளை சந்தித்துள்ள இயக்கம் தி.மு.க. என, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தெரிவித்துள்ளார். தி.மு.க., அ.தி.மு.க. கூட்டணி என்பது வதந்தி என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது பேசிய அவர், திமுக ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாக செயல்படும் என தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் கூறியதை சுட்டிக்காட்டினார். 77 ஆண்டு கால வரலாற்றில் பல வெற்றி தோல்விகளை சந்தித்துள்ள இயக்கம் தி.மு.க. என்றும்., தி.மு.க., அ.தி.மு.க. கூட்டணி என்பது வதந்தி எனவும் அவர் கூறினார். த.வெ.க.வை ஆதரிக்க சி.வி. சண்முகம் காரணங்களை தேடிக் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்ட ஆர்.எஸ்.பாரதி, இரண்டு திராவிட கட்சிகளை எதிர்த்த விஜய் தற்போது த.வெ.க.வில் அ.தி.மு.க. உறுப்பினர்களின் ஆதரவை பெறப் போகிறாரா? அதிமுக உறுப்பினர்களின் ஆதரவை பெற்று ஆட்சியை நடத்தினால் விஜயின் நிலைப்பாடு தான் என்ன? என வினவியுள்ளார்.

---

## டி.எஸ்.ஆர்.பிரதர்ஸ் – சென்னை தெற்கு மாவட்டக் கழக இலக்கிய அணி துணை அமைப்பாளர்

# டி.எஸ்.ரவிச்சந்திரன் - ஆர்.பத்மாவதி இல்லத் திருமண விழா!

## முன்னாள் அமைச்சர் – மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் தலைமையேற்று நடத்தி வைத்தார்!

சென்னை, மே 14-

சென்னை தெற்கு மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் டி.எஸ்.ரவிச்சந்திரன் - ஆர்.பத்மாவதி இல்லத் திருமணவிழா நேற்று (13.5. 2026) புதன்கிழமை காலை 6 மணி அளவில் சைதாப்பேட்டை பஜார் சாலை வர்த்தகர் அறக்கட்டளை திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

சைதாப்பேட்டை து.துரை - து.திலகவதி ஆகியோரின் புதல்வி து.தமிழ்ச்செல்விக்கும் கர்நாடக மாநிலம், பெங்களூரு ராஜேந்திர பிரசாத் - இரா. கிருஷ்ணவேணி ஆகியோரின் புதல்வர் இரா. கார்த்திகேயனுக்கும் மணவிழா 13.5.2026 - புதன் காலை 6 மணியளவில் சைதாப்பேட்டை வர்த்தகர் அறக்கட்டளை திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இம்மணவிழாவிற்கு பகுதி செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., இரா.துரைராஜ் எம்.சி., மற்றும் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., களக்காடி எல்லப்பன், மின்னல் கந்தப்பன், எம்.எஸ்.ஹரிபாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



எஸ்.பி.கோதண்டம் எம்.நாகா, தா.மோகன்குமார், ஆர்.கிருஷ்ணகுமார், கொட்டிவாக்கம் ம.பார்த்தி பன் ஆகியோர் வரவேற்றனர்.

இம்மணவிழாவிற்கு சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையேற்று மணமக்கள் து.தமிழ்ச்செல்வி - இரா. கார்த்திகேயன் ஆகியோரை வாழ்த்தினார்.

இம்மணவிழாவில் துணை மேயர் மு.மகேஷ்குமார், ப.தாயகம்கவி, ச.அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி. பிரபாகர ராஜா, எஸ்.குணசேக ரன், க.தனசேகரன், பாலவாக்கம் க.சோமு, வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி., காசிமுத்துமாணிக்கம், பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி., பாலவாக்கம் மு.மனோகரன், வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் எம்.சி., வாசுகி பாண்டியன், எஸ்.வி.ரவிச்சந்திரன் எம்.சி., வி.இ.மதியழகன் எம்.சி., நொளம்பூர் வே.ராஜன் எம்.சி., கே.கண்ணன் எம்.சி., மு.இராசா எம்.சி., அ.ம. துரைவீரமணி, ஜி.வெங்கடேசன், வேளச்சேரி வே. ஆனந்தம் எம்.சி., எம்.விநாயக மூர்த்தி, ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., சைதை சாதிக், நா.மணிகண்டன், கோட்டூர் எஸ்.பிரகாஷ், அஞ்சல் என். ராமன், கோ.பாஸ்கரன்,

டி.என்.சிவமணி, த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதா கௌதமன், வி.பி.ஜானகிராமன், முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், மு.பாக்கியலட்சுமி, ஆர்.அருணகிரி, சை.மு.சேகர், ந.தமிழரசு, அட்கோ கமலநாதன், நா.ராதாகிருஷ்ணன், எல். ஆரோக்கியராஜ், க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், நேருநகர் எஸ்.பாட்சா, வே. முருகன், ஆ.வரதன்,

கு.புகழ்வேந்தன், ஜி.கே. ராமச்சந்திரன், வீ.மதிவாணன், பொன்.ஜெய்சிங், ஆர். ரவி, பால்கார் ஆ.ரவி, ஜி. பாபு, ஆர்.எல்.காந்தன், த. மணி, டி.வி.நரசிம்மன், ச. சேகர், என்.நந்தகோபால், எஸ்.ராதாகிருஷ்ணன், எஸ். ஜெ.சலாம், எஸ்.ரவி, க.உமாபதி, ஜி.யோவான், இரா.சுதாபிரியன், கே.எம்.எஸ்.கணேசன், வே.ரமேஷ்குமார், கோட்டூர் ந.பாபு, மு.மகேஷ் லாரன்ஸ், ஏ.மஜீத் உள்ளிட்ட கழகத்தினர் பலர் பங்கேற்று வாழ்த்தினர்.

---

# கேள்விக் கென்ன பதில்?

**கேள்வி:** *சட்டப் பேரவைக்குப் புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜே.சி.டி. பிரபாகர் அவர்களின் நன்றி உரை எப்படி இருந்தது ?*

**பதில்:** இதுவரை எந்த பேரவைத் தலைவரும் எடுத்த எடுப்பிலேயே இவ்வளவு நீண்ட உரையை ஆற்றியதில்லை.

உரையின் பெரும் பகுதி த.வெ.க. தலைவரைப் போற்றிப் பாராட்டிப் புகழ்வதாகவும், எதிர்க்கட்சியின் மீது மறைமுகமான பகை உணர்வும், வெறுப்பும் இழைந்தோடுவதாகவும் இருந்தது!